பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 07 2025 6 45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஜனநாயக உணர்வு, நீர்ப் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சோழர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களவையில் இன்று விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.
- இந்த ஆண்டு 12 ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.
- மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் உபரிநீரை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு விவசாயிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- ஆசியக் கோப்பை ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

ஜனநாயக உணர்வு, நீர்ப் பாதுகாப்பு, வர்த்தகம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்று அனைத்துத் துறைகளிலும் சோழர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கங்கைகொண்ட சோழபுரம் பயணம் குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சோழர்களின் சிறப்புகளை வருங்கால தலைமுறையினர் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சோழர்கால கட்டிடக்கலை தனித்துவம் வாய்ந்தது என்றும், சோழப் பேரரசர்களின் தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டை வலிமைப்படுத்தவும், ஒற்றுமை உணர்வை மேம்படுத்தவும் சோழப் பேரரசர்கள் நம்மை ஊக்குவிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து திருடப்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் தொல்லியல் சிறப்புவாய்ந்த பொருட்களை மீண்டும் நாட்டிற்கு கொண்டு வருவதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சைவ சித்தாந்தமும், சோழர்களின் கோவில் கலைகளும்' என்ற தலைப்பிலான கண்காட்சி, தமிழர்களின் வரலாறு, கலாச்சாரம், ஆன்மிகச் சிறப்புகளின் மகத்துவத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களவையில் இன்று விவாதம் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி இந்த விவாதத்திற்காக 16 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நாடாளுமன்ற கூட்டத்தொடரின் முதல் நாளிலிருந்தே அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் திரு. கிரண் ரிஜிஜு சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

இந்த ஆண்டு 12 ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புவி கண்காணிப்புக்கான **NISAR** செயற்கைக்கோள் வரும் 30ஆம் தேதி **GSLV-F16** ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிக்கோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட இருப்பதாகக் கூறினார்.

இந்திய விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்பி பூமிக்கு அழைத்து வருவதற்கான ஆராய்ச்சிகளை இஸ்ரோ முடித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

36 கிலோ எடையிலான ராக்கெட்டில் ஆரம்பித்து தற்போது 75 ஆயிரம் கிலோ எடைகொண்ட ராக்கெட்டுகளை அனுப்பும் அளவிற்கு இஸ்ரோ வளர்ச்சியடைந்திருப்பதாக கூறிய திரு. நாராயணன்,

நாட்டின் 100வது சுதந்திர தினத்தை கொண்டாடும் வேளையில் விண்வெளித் துறையில் இந்தியா வல்லரசாக திகழும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

மேட்டூர் அணையில் இருந்து திறந்துவிடப்படும் உபரிநீரை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு விவசாயிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆண்டு 98 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக கடைமடைப் பகுதி வரை தண்ணீர் சென்றடைந்து பயிர் சாகுபடி சிறப்பாக நடைபெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மேட்டூர் அணையில் இருந்து கிடைக்கும் உபரி நீரை முறைசார்ந்த குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பிவிட்டு முடிந்த அளவுக்கு தண்ணீரை சேமிக்க நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதிக அளவு தண்ணீர் வெளியேற்றப்படுவதன் காரணமாக வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள நீர்வளத்துறை அதிகாரிகளை அரசு அறிவுறுத்தி இருப்பதாகவும் பொதுமக்கள் வெள்ள அபாய எச்சரிக்கையை கருத்தில்கொண்டு விழிப்புடன் இருக்குமாறும் திரு. துரைமுருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இதனிடையே தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து ஒரு லட்சத்து 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், மேட்டூர் அணையில் இருந்து 16 கண் மதகு வழியாக ஒரு லட்சம் கன அடி அளவிற்கு தண்ணீர் திறந்துவிடப்படுவதால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், பள்ளிப்பாளையம் பகுதிகளில் காவிரிக் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரத்தில் உள்ள குடியிருப்புகளில் மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருச்செந்தூர் - சென்னை இடையிலான செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் 24 பெட்டிகள் இணைக்கப்படும் என்று தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் கூறியுள்ளார்.

திருச்செந்தூரில் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 17 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் ரயில் நிலைய மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேம்படுத்தப்பட்ட ரயில் நிலையம், அக்டோபர் மாதத்தில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

திருச்செந்தூர் முதல் திருநெல்வேலி வரை உள்ள ரயில் நிலையங்களில் நடைமேடை விரிவாக்கப் பணிகள் முடிவடைந்த பிறகு திருச்செந்தூரில் இருந்து பாலக்காடு செல்லும் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட அனைத்து ரயில்களிலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும் என்றும் திரு. ஆர்.என். சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

உலக ஹெபடைடிஸ் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்லீரல் நலன் மற்றும் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

ஹெபடைடிஸ் ஒழிப்பு மற்றும் கல்லீரல் புற்றுநோயில் இருந்து தற்காத்துக்கொள்ளுதல் என்பதே இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

<<<<>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலம் சாரல் திருவிழா, வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவடைந்தது.

இதையொட்டி நடைபெற்ற நாய் கண்காட்சியை ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசித்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

கிரீஸ் நாட்டின் 5 வனப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக தலைநகர் ஏதென்ஸ் உள்ளிட்ட இடங்களில் வெப்ப அலை வீசுகிறது.

<<<<>>>>

ஜப்பான் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என்று அந்நாட்டு வானிலை மையம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

போபால் மெட்ரோ ரயில் சேவை வரும் அக்டோபர் மாதம் செயல்பாட்டுக்கு வரும் என்று மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் முதலாவது செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அங்கன்வாடி திட்டத்தை மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் நாக்பூரில் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

பராமரிப்பு பணிகள் காரணமாக காட்பாடி – ஜோலார்பேட்டை இடையேயான மெமு ரயில்சேவை இரு மார்கங்களிலும் இன்று ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தருமபுரி மாவட்டம் இண்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆட்சியர் திரு. சதீஷ் ஆய்வு செய்து அங்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

<<<<>>>>

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டநாதர் கோயில் ஆடிப்பூர தேரோட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

<<<<>>>>

சென்னை கோடம்பாக்கம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 100 கிலோ வாட் மின்மாற்றியை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசியக் கோப்பை ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Macau-**வில் நடைபெற்ற இப்போட்டியில் **Darjada, Alpesh, Aditya, Kanwar Preet** ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

**Yash** வெள்ளிப் பதக்கத்தையும், **Hitesh, Aradhya, Navroop** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

<<<<>>>>

அர்ஜென்டினாவில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Payas Jain – Ankur Bhatacharjee** இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

<<<<>>>>

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியாவின் கொனேரு ஹம்பி – திவ்யா தேஷ்முக் இடையிலான இரண்டாவது ஆட்டமும் டிரா ஆனது.

டை-பிரேக்கர் சுற்று இன்று நடைபெற உள்ளது.

<<<<>>>>